# சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை

# 2011–2012 ஆம் ஆண்டிற்கான அறிவிப்புகள்

## வனத்துறை

### 1. திருச்சியில் வண்ணத்து பூச்சி பூங்கா அமைத்தல்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, திருச்சி மாவட்டம் ஸ்ரீரங்கம் அருகில் மேல் அணைக்கட்டு ஒதுக்குக் காட்டில் வண்ணத்து பூச்சி பூங்கா மற்றும் நட்சத்திர வனம் (27 நட்சத்திரங்களுக்குரிய மர அல்லது தாவர இனம்) 10 எக்டேர் பரப்பளவில் அமைக்கப்படும். நாட்டின் பல பகுதிகளிலிருந்து வருகை தரும் பக்தர்களுக்கும்,



சுற்றுலாப்பயணிகளுக்கும் பொழுதுபோக்கு இடமாக பயன்படும் இப்பூங்கா, அழிந்து வரும் மிக அரிய வகை வண்ணத்து பூச்சி இனங்களை பாதுகாக்க பேருதவியாக அமையும்.

### 2. கண்மாய்ப்பகுதிகளில் கருவேல் தோட்டங்கள் எழுப்புதல்

கடந்த ஆட்சியின் போது கண்மாய்களில் கருவேல் தோட்டங்கள் அமைக்கும்பணி நிறுத்தப்பட்டது. இத்தோட்டங்களின் மூலம் உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஆண்டுதோறும் ரூபாய் 25 கோடி வரை கணிசமான வருவாய் கிடைத்து வந்தது. இத்திட்டத்தினை மீண்டும்

செயல்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். அதற்கேற்ப 2011–2012ஆம் ஆண்டு முதல் ஐந்தாண்டு காலத்தில் கண்மாய் பகுதிகளில் 1,00,000 எக்டேர் பரப்பளவில் கருவேல் தோட்டங்கள் உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. 2011–2012ஆம் ஆண்டில் ரூ.15 கோடி செலவில் 6,000 எக்டேர் பரப்பளவில் கருவேல் தோட்டங்கள் அமைக்கப்படும்.

**3. கன்னியாகுமரி மாவட்டத்தில் நிறுவ உத்தேசிக்கப்படும் சுசீந்திரம் பாதுகாக்கப்பட்ட புகலிடத்தில் அபிவிருத்தி மற்றும் மேலாண்மைப்பணிகள் செய்தல்**

கன்னியாகுமரி மாவட்டத்தில் சுசீந்திரம், தேரூர் மற்றும் மணக்குடிகாயல் பகுதியில்



நன்னீர் கழிமுகத்தில் தனித்துவம் வாய்ந்த ஈரநிலம் மிகப்பெரிய உயிர்ப் பன்மை மண்டலமாக அமைந்துள்ளது. இந்த ஈரநிலத்திலுள்ள ஈரநிலப்பறவையினங்களை பாதுகாப்பதற்காக, பாதுகாக்கப்பட்ட புகலிடமாக அறிவிக்கை செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள பகுதியில் 2011–12ஆம் ஆண்டில் ரூ.1.61 கோடி மதிப்பீட்டில் அபிவிருத்தி மற்றும் மேலாண்மை பணிகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, மேற்கொள்ளப்படும்.

**4. நிவாரணத்தொகை வழங்குவதற்கு எதிர்பாராச் செலவு நிவாரண நிதி உருவாக்குதல்**

வன உயிரின மோதல் தொடர்பான

இழப்புகளுக்கு குறித்த காலத்தில் போதிய நிவாரணத் தொகை வழங்குவதன் மூலம் மக்களின் சகிப்புத்தன்மையை அதிகப்படுத்தலாம். எனவே, எதிர் வரும் காலங்களில் நிவாரணத்தொகையை உடனுக்குடன் வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ரூ.2.50 கோடியில் எதிர்பாராச்செலவு நிவாரண நிதி ஒன்று உருவாக்கப்படும்.

**5. தமிழ்நாடு காடு வளர்ப்பு திட்டம் நிலை– 2**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு நிறுவனம் மற்றும் மாநில அரசு நிதி



ஆகியவைகளை சேர்த்து ரூ.57.80 கோடியில் தமிழ்நாடு காடுவளர்ப்பு திட்டம் நிலை–2 திட்ட கிராமங்களில் தோட்டப் பராமரிப்பு மற்றும் சமுதாய வளர்ச்சிப்பணிகளும், தமிழ்நாடு காடு வளர்ப்பு திட்டம் நிலை–1 திட்ட கிராமங்களில் மண் மற்றும் நீர்வளப்பாதுகாப்பு பணிகளும் செயல்படுத்தப்படும்.

**6. 13 வது நிதிக்குழு மானியம்**

13வது நிதிக்குழு, 2010–2011 ஆம் ஆண்டு முதல் 2014–2015ஆம் ஆண்டு வரையுள்ள காலத்தில் வனங்களை பராமரிக்க தமிழ்நாட்டிற்கு ரூ.142.48 கோடி மானிய நிதி உதவி வழங்கிட பரிந்துரை செய்துள்ளது. இந்த மானியத்தொகை

வனங்களை பேணிப்பாதுகாக்கவும், வன மேம்பாட்டிற்காகவும் செலவிடப்பட உள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 2011–2012ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.28.74 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

**7. தனியார் நிலங்களில் மரம் வளர்த்தல்**

வனங்களுக்கு வெளியே மரங்கள் வளர்த்தலை ஊக்குவிப்பதற்காக சிறு மற்றும் குறு விவசாயிகளின் நிலங்களிலும், தரிசு நிலங்களிலும், தரம் மிக்க மரக்கன்றுகளை நடுவதே தனியார் நிலங்களில் மரம் வளர்க்கும் திட்டத்தின் நோக்கமாகும். மாண்புமிகு



முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 2011–2012 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.13 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

**8. வனப்பகுதிகளில் வனச்சாலை வசதிகளை மேம்படுத்துதல்**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, பழங்குடியினர் மற்றும் வனங்களை சார்ந்து வாழும் உள்ளூர் மக்களுக்கு சிறந்த சாலை வசதி தொடர்பினை ஏற்படுத்த 2011–2012ஆம் ஆண்டில் ரூ.16.79 கோடி மதிப்பீட்டில் வனச்சாலைகள் பராமரிக்கப்பட்டு, மேம்படுத்தப்படும்.

**9. கட்டடங்கள் கட்டுதல்**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, பல்வேறு திட்டங்களின் கீழ் வனத்துறையில் உள்ள கட்டடங்கள் பராமரிப்பு மற்றும் புதிய கட்டடங்கள் கட்டுதல் ஆகியவை ரூ. 3.74 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

**10. பகுதி 2 திட்டங்கள்**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 2011–2012ஆம் நிதியாண்டில் ரூ.4.62 கோடி மதிப்பீட்டில் 19 பகுதி–2 திட்டங்கள் செயல்படுத்தப்படும்.



**11. ஈடு செய்யும் காடு வளர்ப்பு நிதி**

2011–2012ஆம் ஆண்டில் ஈடு செய்யும் காடு வளர்ப்பு நிதி மேலாண்மை திட்ட அதிகார குழு நிதியிலிருந்து (Compensatory Afforestation Fund Management and Planning Authority) பெறப்பட்ட தொகையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ரூ.1.42 கோடி செலவில் 321 எக்டேர் பரப்பில், ஈடு செய்யும் காடு வளர்ப்புப் பணி மற்றும் இதர வன மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்படும்.

**12. புதிய வனக்கோட்டங்கள் தோற்றுவித்தல்**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, வன நிர்வாகத்தை மேம்படுத்த அரியலூர், ராமநாதபுரம், திருவண்ணாமலை வடக்கு மற்றும் மேகமலை வனஉயிரின கோட்டம் ஆகிய நான்கு புதிய வன நிர்வாக கோட்டங்கள் தோற்றுவிக்கப்படும். இந்த புதிய கோட்டங்கள் உருவாக்கும்போது தேவைப்படும் பணியாளர்கள் மறுபணிப்பகிர்வு மூலம் நியமிக்கப்படுவதற்கு ஆண்டுக்கு இவ்வகையில், 2011–2012 ஆம் நிதியாண்டில் தேவைப்படும் நிதி ரூ.5.00 லட்சமும் (தொடரும் செலவினம்) மற்றும் பணியாளர்கள் மாற்றத்திற்காக



ரூ.4.00 லட்சமும் (தொடராச் செலவினம்) செலவாகும்.

**13. வனப்பகுதிகளில் வாழும் மலைவாழ் மக்களுக்கு வனத்துறைப் பணியிடங்களில் முன்னுரிமை கொடுத்து பணியமர்த்துதல்**

வனக்காவலர் பணியிடங்களை தோட்டக்காவலர்கள் மூலம் மட்டுமே நிரப்பப்படவேண்டும் என்ற அரசாணைகளை தளர்த்தி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தற்காலிக வேட்டைத்தடுப்பு காவலர்களாக பணிபுரியும் பழங்குடியினத்தவரையும், மலைவாழ் பழங்குடியினத்தைச் சேர்ந்த இளைஞர்களையும் முன்னுரிமை

அடிப்படையில் வனக்காவலர்களாக நியமனம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

**14. வனப்பணியாளர்களுக்கு இடர்படி உயர்த்தி வழங்குதல்**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, வனம் மற்றும் வன உயிரினங்களை பாதுகாப்பதில் நேரடி பொறுப்பு வகிக்கின்ற சரகர், வனவர், வனக்காப்பாளர் மற்றும் வனக்காவலர்களுக்கு மாதந்தோறும் வழங்கப்படுகின்ற இடர்படி காவல்துறை பணியாளர்களுக்கு இணையாக உயர்த்தி வழங்கப்படும்.



**15. மலைவாழ் மக்கள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் வனத்துறையால் நடத்தப்படும் பள்ளிகளில் பயின்று 10ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பில் முதல் மூன்று இடங்களில் தேர்ச்சி பெற்ற மாணவ மாணவியர்களை ஊக்குவிக்க பரிசுத்தொகை வழங்குதல்.**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, வனத்துறை பள்ளிகளில் படித்து, அரசு தேர்வுத்துறை நடத்தும் இறுதித் தேர்வில் அதிக மதிப்பெண் பெறும் மாணவர்களுக்கு (ஒரு மாணவன் மற்றும் ஒரு மாணவி) பத்தாம் வகுப்பில் முதல் பரிசு ரூ.25,000/–மும், இரண்டாம் பரிசு ரூ.20,000/–மும், மூன்றாம் பரிசு

ரூ.15,000/–மும் மற்றும் 12ஆம் வகுப்பில் முதல் பரிசு ரூ.50,000/–மும், இரண்டாம் பரிசு ரூ.30,000/–மும், மூன்றாம் பரிசு ரூ.20,000/–மும் வழங்கப்படும்.

* * * * *